REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'நம் நாடு'
புதிய சந்தா விகிதம்
★

மூன்று மாதம்	...	...	ரூ. 6
ஆறு மாதம்	...	...	ரூ. 12
ஒரு வருடம்	...	...	ரூ. 24

தனி இதழ் 7 காசுகள்
இலங்கையில் 10 சதம்

மலர் 4]. சென்னை: சித்திரை 18உ செவ்வாய் (30—4—57) ★ வெளியூர்: சித்திரை 19உ புதன் (1—5—57) இதழ் [276

காங்கிரஸ் ஆட்சியாளரின் அள்ளித் தெளித்த அவசரக் கோலம்

நிறைவேற்றும் சட்டங்களில் நிறைந்துள்ள ஓட்டைகள்

நன்மை செய்யவில்லை—நல்லோரை வாட்டுகின்றது

சென்னை பி. அண்டு சி. ஆலைத் தொழிலாளர் பாராட்டுக் கூட்டத்தில் அண்ணா கருத்துரை

"அவசரக் கோலத்தில் அள்ளித் தெளிப்பதைப்போல், இந்த சர்க்கார் சில சட்டங்களைக் கொண்டுவந்து விட்டார்கள்; 60—40 என்ற சட்டம் இன்றையத் தினம், உயர்நீதிமன்றத்தின் படிக்கட்டுகளில் ஏறி இறங்கிக் கொண்டிருக்கிறது.

"எத்தனை பெரிய சட்ட நிபுணர்கள் சர்க்காரில் இருக்கிறார்கள்? எவ்வளவு ஆரஅமர அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கலாம்? கொண்டுவந்த சட்டத்தில், 'விவசாயிக்கு 60—நிலச்சொந்தக்காரருக்கு 40' என்கிறார்கள்; அந்த நிலச்சொந்தக்காரர் யார் என்பதற்கு விளக்கம் தரவில்லை அந்தச் சட்டத்தில்!

"விளக்கம் தராத காரணத்தால், திருச்சியைச் சேர்ந்த ஒரு மிராசுதாரர் உழவர் பெருமக்களை 'உங்களை விவசாயிகள் என்று ஒத்துக்கொள்ளமுடியாது; நீங்கள் கூலிகள்தான்' என்று கூறியிருக்கிறார். 'எப்படி ஐயா, நாங்கள் கூலிகள்? நாங்கள்தானே விவசாயம் செய்தோம்?' என்று கேட்கிறார்கள்—3,000 குடும்பத்தார், குளித்தலைத் தொகுதியில்! 'நீங்கள் செய்வது விவசாயம்தான்; ஆனால், உங்களுக்கு மாடு வாங்கிக் கொடுத்தவன் நான்; எரு வாங்கிக் கொடுத்தவன் நான்; சட்டத்தில், மாடு—எரு வாங்கி யார் போடுகிறார்களோ அவர்கள்தான் விவசாயிகள் என்று உள்ளது; ஆகவே, நீங்கள் கூலிகள்தான்; எனவே, உங்களுக்கு 60—40 தரமுடியாது' என்று சொல்லிவிட்டதால்தான் இப்பொழுது இதேநேரத்தில், குளித்தலையில் உள்ள களத்துமேட்டில் அறுவடை செய்யப்பட்ட நெற்கதிர்கள் போர் போராக அடுக்கப்பட்டுள்ள நிலையிலேயே இருக்கிறது. ஒவ்வொரு களத்து நெற்குவியலிலும் 20, 30 மலபார் போலீசார் நீட்டிய துப்பாக்கியுடன் காவல் காத்துக் கொண்டிருக்கின்றனர். நெல், மிராசுதார் களஞ்சியத்துக்கும் போய்ச் சேரவில்லை; விவசாயிக்கும் போகவில்லை. விவசாயிகளின் பிரதிநிதி இங்கு வக்கீல்களைத் தேடிக்கொண்டு ஓடிவருகிறார்.

"இப்படி ஓட்டை உடைசல் நிறைந்த சட்டங்களைப் போடுகின்ற நேரத்தில், எதிர்க்கட்சியிடத்தில் அவர்கள் ஆலோசனை கேட்டிருந்தால்—ஆளும் கட்சிக்கு ஆலோசனை கூறத்தான் எதிர்க்கட்சியை மக்கள் அனுப்பியிருக்கிறார்கள்—அரசியல் அறிவை' உணர்ந்து கேட்டிருந்தால்—'விவசாயி என்றால் போதாது; விவசாயி என்பதற்கு விளக்கம் தாருங்கள்' என்று சொல்லியிருப்பார்கள்.

"அப்படி எதிர்காலத்தில் பல சட்டங்கள் கொண்டுவரப்பட இருக்கின்றன—பல சட்டங்களைக் கொண்டுவரவேண்டும்; ஆளும் கட்சி கொண்டுவரத் தவறுகின்ற சட்டங்களை நாங்கள் கொண்டுவருவோம்; ஆளும் கட்சியினருக்கு உண்மையிலேயே அரசியலில் சனநாயக நம்பிக்கை இருந்தால் நாட்டிற்குத் தேவையான சட்டங்களைக் கொண்டுவரவேண்டுமென்பதல்ல—எதிர்க்கட்சியினர் கொண்டுவந்தாலும், கொண்டுவருகின்ற சட்டம் நாட்டிற்கு ஏற்றது என்றால் ஒத்துக்கொள்ளத்தானே வேண்டும். அப்படிப் பல சட்டங்களை நாங்கள் கொண்டுவருவோம். கொண்டுவருகின்ற சட்டங்கள் ஆட்சியிலிருப்பவர்களால் தூக்கி எறியப்பட்டால் அவைகளை எடுத்துக்கொண்டுவந்து உங்களிடம் காட்டுவோம்; அப்போது நீங்கள் என்ன எண்ணுவீர்கள்? 'தி. மு. கழகத்தின் கரத்திற்கு அதிக பலத்தை நாம் தரவில்லை; 15 பேர்களைத்தானே அனுப்பியுள்ளோம்; ஆகவே, கட்சியின் பலம் போதாது; இனி அதிக எண்ணிக்கையில் அனுப்ப வேண்டும்' என்றுதானே எண்ணுவீர்கள்?

"நாட்டு மக்களுக்குத் தேவையான எல்லா நல்ல காரியங்களும் சட்டரூபத்தில் வர நாங்கள் முயற்சி எடுத்துக்கொள்வோம். நாங்கள் அந்தக் காரியத்தில் ஈடுபட்டிருக்கும்போது நீங்கள்—வெளியே இருக்கின்ற தோழர்கள் கழகத்தைக் கட்டிக் காப்பாற்றுவதில் நல்ல திறமையைக் காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,"

தொடர்ந்து அண்ணா அவர்கள் பேசியதாவது:—

"தி. மு. கழகத் தோழர்கள் 15 பேர் சட்ட மன்றத்திலே துவக்க இருக்கின்ற புதிய பணிக்குப் பாட்டாளி வர்க்கம்—தொழிலாளியாக வாழுகின்ற இந்தப்பேட்டையில் நீங்கள் எல்லாம் எங்களை வாழ்த்தி வரவேற்பது, புதிய பணியிலே ஈடுபடுகின்ற எங்களுக்கு உண்மையிலேயே பாட்டாளி சமுதாயம் பக்கபலமாக இருக்கின்றது என்ற பொருத்தமானதோர் நிகழ்ச்சியாகும்.

"திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபட்டு இருக்கின்ற இந்தப் பணி, கழகத்திற்கு இதுவரையிலேயே தரப்படாத ஒரு புதிய பொறுப்பாகும். கழகத்துக்கு இதுவரை அளித்திருந்த பொறுப்புகளைவிட பிறருடைய கட்டு திட்டங்களுக்கு அடங்கியும், பிறர் பார்த்து வைக்கின்ற கட்டுதிட்டங்களுக்கு உட்பட்டும் நம்முடைய இலட்சியங்களை அந்தக் கட்டுத் திட்டங்களுக்கு இடையே செலுத்தி தி. மு. கழகத்தின் கொள்கைக்கும் கோட்பாட்டுக்கும் குந்தகம் ஏற்படாத வகையில் நாங்கள் எல்லாம் பணியாற்றியாகவேண்டும்.

"எனவே, சட்ட மன்றத்திலே செல்லுகின்ற நேரத்திலேயும், அதற்குப் பிறகு தொடர்ந்து அங்கே பணியாற்றுகின்ற நேரத்திலேயும் இன்றையத் தினம் நடைபெறுகின்ற இந்தக் கூட்டம் எங்கள் நெஞ்சத்தில்—நினைவில் நன்றாக இடம் பெற்றிருக்கும்.

"மக்கள் எங்களுக்கு ஆர்வத்தைக் காட்டி, நல்ல உற்சாகத்தைக் காட்டி வரவேற்பதற்குக் காரணம், உண்மையிலேயே தி. மு. கழகச் சார்பில் வெற்றி பெற்றிருக்கின்ற இந்த 15 பேர்கள் சட்டமன்றத்திற்குச் சென்று அங்கு ஆற்றவேண்டிய பணிகளை—கடமைகளை சரிவரச் செய்ய வேண்டும் என்று அறிவுறுத்துவதற்காகவேயாகும்.

"நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குக் காரணம் — காங்கிரஸ்காரர்களும் பிற கட்சிகளும் போட்டியிட்ட நேரத்திலேயும் அவைகளைப் பற்றி எல்லாம் பொருட்படுத்தாமல், நீங்கள் எங்களை தேர்ந்தெடுத்ததற்குக் காரணம், நாங்கள் நாட்டின் காவலர்களாய் — மக்களின் உண்மை ஊழியர்களாய், இலட்சியம் தவறாமல்—குறிக்கோள் கெடாமல் சட்ட மன்றத்திலே பணியாற்றுவோம் என்ற நம்பிக்கையினாலேதான் என்று நீங்கள் எங்களுக்கு நினைவூட்டுகிறீர்கள் என்று கருதுகிறேன். ஏனென்றால், தேர்தல் முடிவு தெரிந்து ஒரு மாதத்திற்குமேல் ஆகியும் கூட இவ்வளவு கட்டுக்கடங்காத ஆர்வம் இருக்கவேண்டிய தேவையில்லை.

திலே எந்த இடத்திலேயும் காண்கிறோம்; நாள் தவறாமல் பார்க்கின்றோம். பட்டி தொட்டிகளிலெல்லாம் பார்க்கின்றோம்; வெற்றி பெற்றவர்களின் தொகுதிகளிலும் பார்க்கின்றோம்—வெற்றிபெற முடியாதவர்கள் உள்ள தொகுதிகளிலும் பார்க்கின்றோம். காரணம் என்ன?

"வெற்றிபெற்ற காங்கிரசாரைப் பற்றி மக்களுக்குக் கவலையில்லை; தோற்றுப்போயிருந்தாலும் தி. மு. கழகத்தைப் பற்றித்தான் நாட்டு மக்கள் அதிகம் அக்கறை படுகிறார்கள். அதற்குக் காரணம் என்ன?

சிறைப்பட்ட நெப்போலியனை நாட்டு வீரர்கள் மதித்ததுபோல்!

தி.மு. கழக பாசறையை மக்கள் மதிக்கின்றனர்

"இந்த ஆர்வத்துக்கும் உற்சாகத்துக்கும் காரணம் என்ன? என்னை நானே கேட்டுக்கொள்கிறேன்; நம்மைப்பற்றித் தப்பாகக் கணக்குப் போடுகிற மாற்றுக் கட்சியினரையும் கேட்கிறேன்.

"15 பேர்தானே வெற்றி பெற்றார்கள் என்று அலட்சியத்தோடு பேசப்பட்டாலும், இந்த 15 பேர்கள் சட்டமன்றத்திலே என்ன பணியாற்றப்போகிறார்கள் என்று கர்வத்தோடு கேட்கப்பட்டாலும், '150 பேர் நாங்கள் இருக்கின்றோம்; இந்த 15 பேர் இருந்து என்ன செய்யமுடியும்?' என்று எடுத்துச் சொன்னாலும், 'இவர்கள் சட்டசபைக்குச் சென்ற மறுநாளே சட்டசபையில், 'கொடுத்தால் திராவிட நாடு கொடு; இல்லையானால் வெளியேறுவோம்,' என்று கூறுவார்கள்,' என்று சில வட்டாரங்கள் கருதிக் கொண்டிருந்தாலும், 'இவ்வளவு மக்கள் கூடி இருப்பதற்குக் காரணம் என்ன? என்ன புதிய அதிசயத்தை இன்றையத் தினம் எதிர்பார்க்கின்றீர்கள்? பார்த்துப் பார்த்துச் சலித்துப் போன எங்களை எத்தனை முறை பார்த்திருக்கின்றீர்கள்? கேட்டுக் கேட்டு நெஞ்சாரப் பதிந்து போன பிரச்சினைகளை மறுபடியும் மறுபடியும் நாங்கள் பேசுகிறோம்; மீண்டும் மீண்டும் நீங்கள் உற்சாகத்தோடு கேட்கிறீர்கள் என்றால் என்ன பொருள்? இந்தப் பொருளின் சூட்சமத்தினை எந்த அரசியல் வட்டாரம் புரிந்துகொள்ளவில்லையோ அந்த அரசியல் வட்டாரம், தமிழ் நாட்டு அரசியல் சூட்சமத்தை அறிந்துகொள்ளவில்லை என்றுதான் பொருளாகும்.

"எண்ணெய் இருக்கின்ற நேரத்தில் மட்டும்தான் விளக்கு எரியும்; எண்ணெய் இல்லாத விளக்கு எரிகிறதென்றால், அது, மின்சார விளக்கு என்று விஞ்ஞான அறிவு தருவதுபோல், வெற்றிகிடைத்தால் மட்டுமே சில கட்சிகளுக்கு மகிழ்ச்சி இருக்கும்; வெற்றி கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும், கிடைத்த வெற்றி சொற்பம் — ஏற்பட்ட தோல்வியோ மிக அதிகம் என்றாலும், கிடைத்த வெற்றிக்குமகத்தான உற்சாகத்தை தமிழகத்

"பிரெஞ்சு நாட்டிலே ஒரு தடவை தோல்விக்கு உட்பட்ட நெப்போலியனை 'யெல்பா,' என்ற தீவில் கொண்டுபோய் அடைத்தார்கள். அவன் குடியிருந்த தீவைக் சுற்றிலும் கடல் இருந்தது. அவனைத் தீவிற்கு அனுப்பியவர்கள் பாரிஸ் பட்டணத்திலே செங்கோலோச்சிக் கொண்டிருந்தார்கள்; ஆனால் அந்தக் கொலு மண்டபத்திலே ஜொலித்த ஜொலிப்புகளை பிரெஞ்சு நாட்டு வீரர்கள் கண்ணாலே காணவில்லை — கண்ணுக்குத் தெரியாத கடலுக்கப்பால் இருந்த தீவைப்பற்றித்தான் அத்தனை பேரும் எண்ணிக் கொண்டு—எல்பா தீவைத் தான் அத்தனை வீரர்களின் கண்களும் நோக்கிக்கொண்டிருந்தன"

என்று பிரெஞ்சு நாட்டு வரலாற்றிலே ஒரு குறிப்புண்டு.

"தோற்ற நெப்போலியன் இருக்கின்ற இடம் வீரர்களுக்கு எப்படி 'புனித ஸ்தல'மாயிற்றோ அதைப்போல, தோற்றுப் போனவர்கள் ஏராளமாக தி. மு. கழகத்திலே இருந்தாலும் தி. மு. கழகத்தைத்தான், 'விடுதலை பெற்றுத் தரக்கூடிய பாசறை' என்று தமிழ் நாட்டு மக்கள் இன்றைத் தினம் தீர்மானித்திருக்கிறார்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

ஜான்சி இராணிக்கு நினைவுச் சின்னம்

அடுத்த திங்களில் நடைபெற இருக்கும் இந்திய சுதந்திரப் போரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ரூ. 85,000 செலவில் உ. பி. அரசாங்கம் 'ஜான்சி' இராணியின் நினைவுச் சின்னத்தை ஏற்படுத்த முடிவு செய்திருக்கிறது.

இந்தச் சிலையின் உயரம் 21 அடி உயரமுள்ளதாக இருக்கும். இந்த நினைவுச் சின்னத்தின் அருகில் தண்ணீர்த் தொட்டியும், பூங்காவும் ஏற்படுத்தப்படும்.

நம் நாடு

சென்னை 30—4—57 செவ்வாய்

மே விழா

உரிமை முழக்க நாள்—எழுச்சித் திருநாள்—உழைப்போர் தம் பெருநாள்—மேதினம்!

மேதின வரலாற்றினை ஆண்டுதோறும் நினைவு கூறிக்கொள்வது, உழைப்பவருக்கு பெற்றவற்றை நினைத்துப் பெருமைப்படவும், பெறவேண்டியனவற்றிற்காகப் போராடத் தயாரித்துக் கொள்ளவும் துணைசெய்யும் வல்லமை பெற்றதாகும்.

'உழைப்பவருக்கே இந்த உலகம்' என்ற ஒப்பற்ற இலட்சியம் சித்திக்க, உலகெங்கணும் உள்ள உழைப்போர், ஆண்டுதோறும் புதுமுறுக்கோடும் உற்சாகத்தோடும் எடுக்கும் மே விழாக்கள், நிச்சயம் பலனளிக்கத்தான் செய்கின்றன!

அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உரிமைவேண்டி நிற்போருக்கு—விடுதலைகோரி கொடி உயர்த்தியிருப்போருக்கு மே விழாக் கொண்டாட்டங்கள் புருவத்தை நிமிர்த்தவும், விழிகளின் ஒளிகாட்டவும் தோளில் வீரம் சேர்க்கவும், குனிந்த முதுகை நிமிர்த்தவும், நடையில் மிடுக்கு ஏற்றவும், உள்ளத்தில் நம்பிக்கை ஊட்டவும் கட்டாயம் உதவக்கூடியன என்பது மிகையல்ல.

தொழிலாளப் பெருமக்களுக்குத் தன்னம்பிக்கை தர, தங்கள் ஆற்றலை உணரச் செய்ய, போராட்ட உள்ளத்தைத் தோற்றுவிக்க, இந்த மே தின வரலாறு போன்ற எழுச்சி வடிவங்கள் வேறு கிடையாதெனலாம்.

அத்தகு பொன்னனை திருநாளின், கர்த்தாக்களுக்கு, நன்றிநிறை உள்ளத்தோடு உலகம் என்றென்றைக்கும் வீர வணக்கம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது.

திராவிடத் திருநாட்டைப் பொறுத்தமட்டில் தொழிலாளர்கள், தாங்கள் ஒரு சக்தி என்பதையே இன்னும் உணராதவர்களாயிருக்கின்றனர். உழைக்கிறோம்—ஆனல் வாழ்வதில்லை; காரணம், எங்களுக்குப் புலப்பட்டதில்லை—'எல்லாம் அவன் செயல்,' என்ற, உள்ள நிலையில்தான் இருக்கின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் இன்னும் 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்ற எண்ணமும், 'வாழவே பிறந்தோம்' என்ற உறுதியும் கொண்டவர்களாக இல்லை. வாழ்வில் தன்னம்பிக்கையற்றவர்களாய், 'வாழ்வு மாயம்' என்ற மத-மூடநம்பிக்கையில் உழலுபவர்களாய், 'வாழச் செய்யும் ஆக்க சக்தி எது? வாழாது தடுக்கும் தீயசக்தி எது? நம் வாழ்வைத் தட்டிப் பறிக்கும் சுயநலமிகள் யார்? நம் உழைப்பைத் திருடும் உலுத்தன் யார்? உரிமையைப் பறிக்கும் கொடுங்கோலர் எவர்? நாட்டுச் செல்வத்தைச் சூறையாடும் கொள்ளையர் எவரெவர்? தமது தாயகத்தை அடிமை கொண்டிருக்கும் ஆதிக்கக்காரர் எவர்?—என்ற சிந்தனையே அற்றவர்களாய், பழமையைக் கெட்டியாய்ப் பிடித்து நிற்கும் நிலைகெட்டவர்களாய் நிற்கின்றனர்.

• இந்த அவலநிலை மாறுவதற்கு, மே விழா போன்ற உரிமை வேட்கையூட்டும் திருவிழாக்களால்தான் முடியுமே தவிர, ஏனைய 'திருமஞ்சனம்', 'பூரம்', 'அவிட்டம்', 'சதுர்த்தி', 'தீபம்', 'திருவாதிரை', 'பூசம்', 'மகம்', 'உத்திரம்', 'பௌர்ணமி', 'விசாகம்' போன்ற மத நம்பிக்கைத் திருவிழாக்களினால் முடியாது.

அதுமட்டுமின்றி, மே தின விழாவில் ஈடுபடுவோர், மே தினப் பெருமை பற்றிப் பேசினால் மட்டும் போதாது; இதர விழாக்கள் தரும் சிறுமை பற்றியும் தொழிலாளர் உணர்ந்தாக வேண்டும். இந்த நோக்கத்துடன் கொண்டாடப்படும் மே விழாக்கள்தான், உண்மையில், இந்த நாட்டுத் தொழிலாளரிடை தேவைப்படும் விழிப்புணர்வையும், உரிமை வேட்கையையும் தோற்றுவிக்க முடியும் என்று நாம் மனதார நம்புகிறோம்.

மே விழாவில் பெருமையோடு ஈடுபடும் பல்வேறு நாடுகளிலும் வாழும் தொழிலாளர்களுக்கு, மனித சமூகத்தின் வேறெல்லாப் பிரிவினரையும் போல ஒத்த பிரச்சினைகள் சில இருப்பினும், தாங்கள் பிறந்து வாழும் தாயகத்திற்கென்ற பிரத்தியேகமான தேசியப் பிரச்சினைகள்தான் அந்தந்த நாட்டுத் தொழிலாளர்களின் பிரதான கவனத்திற்குரியனவாகும் என்பதில் இருகருத்து இருக்க முடியாது.

மேலும்...!

அந்த வகையில் திராவிட நாட்டைப் பொறுத்து, இந்த நாட்டுத் தொழிலாளருக்கு மகத்தானதோர் தேசியக் கடமை இருக்கிறது. தங்கள் தாயகம் வடநாட்டு ஏகாதிபத்தியப் பிடிப்பிலிருந்து விடுபட, அமைந்துள்ள விடுதலைப்போர்ப் படையில் இந்தநாட்டுத் தொழிலாளர்கள் முழு அளவில் இணைந்து நின்று, போரிட வேண்டிய கடமைதான் அது!

வேறெல்லா நாட்டுத் தொழிலாளரையும்போல, இந்த நாட்டுத் தொழிலாளரும், பூரண விடுதலையோடு நாகரிகமானதோர் நல்வாழ்வைப் பெற வேண்டுமென ஆசிக்கும் நாம்—மனதார வாழ்த்தும் நாம், இந்தப் புனிதமான தேசியக் கடமையை அவர்களுக்கு உணர்த்துவது மிக அவசியம் என்றே கருதுகிறோம்.

தொழில் நுட்பக் கல்வி விஸ்தரிப்புக்கு ரூ. 9,60,00,000

இங்கல்ல—வடக்கில்!

கல்கத்தா, ஏப். 28—

கிழக்குப் பிராந்தியத்தில் தொழில் நுட்பக் கல்வியின் விஸ்தரிப்புக்காக மொத்தம் ரூ. 9,60,00,000 செலவிட வேண்டுமென்று சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது.

பல்வேறு தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களுக்கான கட்டடங்கள், சாதனங்கள், சிப்பந்திகளுக்கான குடியிருப்புகள், விடுதிகள் முதலியவை பற்றிய ஏற்பாடுகளும் அடங்கியுள்ளன.

வேலை இழக்கும் தொழிலாளர்களுக்கு நஷ்ட ஈடு

டில்லியின் புதிய சட்டம்

புதுடில்லி, ஏப். 29—

பொருளாதாரக் காரணங்களைக் காட்டியும், வேறு நபர்களுக்கு நிறுவனத்தை பற்றியும் அதில் பணியாற்றும் தொழிலாளருக்கு எவ்வித நஷ்ட ஈடும் அளிக்காமலும் பல நிறுவனங்கள் மூடப்பட்டு வந்துள்ளன. இனி அவ்வாறு நடைபெறாதவாறு, மத்திய அரசாங்கம் அவசரச் சட்டமொன்றைப் பிறப்பித்திருக்கிறது.

தவிர்க்கமுடியாத காரணங்களை முன்னிட்டு ஒரு நிறுவனம் மூடப்படுமானால் நிர்வாகிகள், தொழிலாளர்களுக்குக் குறைந்தது மூன்று மாதச் சம்பளம் நஷ்டஈடாக தரவேண்டும். மூடப்படும் நிறுவனத்தின் நிர்வாகத்திடம் நஷ்ட ஈடுகோர எல்லாத் தொழிலாளர்களுக்கும் இந்தச் சட்டத்தின்மூலம் உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது.

கட்டிட நிர்மாண வேலையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு அதிகமாகக் கட்டிட வேலைகளில் ஈடுபட்டிருந்தால் மட்டுமே நஷ்டஈடு கேட்க உரிமை பெற்றவர்கள் என்று சட்டம் கூறுகிறது.

தொழில் நிறுவனங்கள் வேறு நபருக்கோ, அல்லது வேறு நிறுவனத்திற்கோ மாற்றப்படும்போது, தொழிலாளர்களுக்குப் பழைய உரிமைகளைப் புதிய நிர்வாகிகள் தருவதாக ஏற்றுக்கொண்டால நஷ்டஈடு கோர தொழிலாளர்களுக்கு உரிமையில்லை.

மாற்றத்தின் காரணமாகத் தொழிலாளர்களின் வேலை வாய்ப்பை உறுதிப்படுத்தாது நீக்கப்படும் நிலைமை இருப்பின், நஷ்டஈடுகோரும் உரிமை தொழிலாளர்களுக்கு உண்டு என்று சட்டம் சுட்டிக்காட்டியுள்ளது.

அசோக சின்னமில்லாத நோட்டுகள்

6 மாத காலத்திற்குச் செல்லும்

ஒரு ரூபாய் நோட்டுகளுக்கு மட்டும் விதிவிலக்கு

புதுடில்லி, ஏப். 27—

அசோக சின்னம் இல்லாத ஒரு ரூபாய் நோட்டுகளைப் பற்றி மத்திய அரசாங்கம் அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளது.

"கிராமங்களில் இன்னும் இத்தகைய நோட்டுகள் புழக்கத்தில் இருப்பதால், ஏப்ரல் 28-ந் தேதியிலிருந்து மேலும் 6 மாத காலத்திற்கு இந்த நோட்டுகள் செல்லத்தக்கவையாகும்; இந்தக் காலத்திற்குள் மக்கள் அசோக சின்னமில்லாத நோட்டுக்களை மாற்றிக் கொள்ளவேண்டும்" என்று, அந்த அறிக்கை மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

அசோக சின்னம் இல்லாத ஒரு ரூபாய் நோட்டுக்களுக்கு இந்தத் தடை கிடையாது; அவை வழக்கம்போல் புழக்கத்தில் இருக்கும்.

திரைப்படத் தயாரிப்பு

ஒரு கண்ணோட்டம்

1956-ம் ஆண்டில், திரையிடப்படுவதற்காக மொத்தம் 294 திரைப் படங்களுக்கு நற்சான்று அளிக்கப்பட்டன. இவற்றில் பெரும் பகுதி 121 படங்கள் இந்தியப் படங்களாகும்.

வங்காளியில் 53; தமிழில் 50; தெலுங்கில் 27; கன்னடத்தில் 14; மராத்தியில் 13; மலையாளத்தில் 5; குஜராத்தியில் 3; ஒரியாவில் 2; உருதுவில் 2; அசாமிய மொழியில் 4 என்ற அளவில் படங்கள் அத்தாட்சி பெற்றன. பஞ்சாபி, காஷ்மீரி மொழிகளில் படங்கள் எதுவுமில்லை.

திரைப்பட மத்திய தணிக்கை போர்டு, 1956-ம் ஆண்டில் மொத்

(4-ம் பக்கம் பார்க்க)

'எதிர்காலத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்கவல்லவர்கள்'

'நாடறிந்த மறுமலர்ச்சி கலைஞர்கள்'

அண்ணா, மு. கருணாநிதி ஆகியோருக்கு

தியாகராயர் கவின் கலை மன்றத்தார் பாராட்டு

சென்னை, ஏப். 29—

வடசென்னை - தியாகராயர் கவின் கலை மன்றத்தின் சார்பில் நேற்று மாலை, தியாகராயர் கல்லூரி கலை அரங்கில், அண்ணா அவர்களுக்கும், தோழர் கருணாநிதி அவர்களுக்கும் வெகு சிறப்பானதோர் பாராட்டு விழா நடைபெற்றது.

விழாவிற்கும், விழாவினை ஒட்டி நடைபெற்ற எம். ஜி. ஆர். நாடக மன்றத்தினரின் 'இன்பக் கனவு' நாடகத்திற்கும் ஏராளமான மக்கள், ஆண்களும் பெண்களுமாகக் குழுமியிருந்தனர்.

தேநீர் விருந்து

துவக்கத்தில் அண்ணா, கருணாநிதி ஆகியோருக்கு, கவின் கலை மன்றத்தினர் ஒரு தேநீர் விருந்து நடத்தினர்.

வரவேற்பு

பின்னர், அன்றைய விருந்தினர்களான அண்ணா அவர்களும், மற்றும் பிறரும் மேடைக்கு அழைத்து வரப்பட்டனர்.

மன்றத்தின் சார்பில், தோழர் க. அறிவழகன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், மன்றத்தின் தோற்றத்தையும், அதன் நோக்கத்தையும், எதிர்காலத்தில் அதன் வளர்ச்சி பற்றியும் விளக்கினார்.

பின்னர், தலைமையேற்று பாராட்டு விழாவை நடத்தித் தருமாறு மன்றத் தலைவர் திரு. ஸ்ரீராமுலு(செட்டியார்) அவர்களை தோழர் அறிவழகன் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

தலைமையுரை

ஆங்கிலத்தில் தலைமையுரை ஆற்றிய ஸ்ரீராமுலு அவர்கள், அண்ணாவையும், கருணாநிதியையும் மன்றத்தின் சார்பில் வரவேற்றுப் பாராட்டுவது தங்களுக்குப் பெருமை தரக்கூடியது என்று குறிப்பிட்டார்.

"இவர்கள் இருவரும் நாடறிந்த மக்கள் தொண்டர்கள்; நம்மோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள்—நமது சகோதரர்கள்; அவர்கள் தேர்தலில் பெற்ற வெற்றி நமக்குத் தரும் மகிழ்ச்சியையும் - ஆனந்தத்தையும் கொண்டாடுவதற்காகவே இந்த விழா! அவர்களை வரவேற்றுப் பாராட்டும் இந்த விழாவில் ஒன்றை நான் குறிப்பிட விழைகிறேன். இந்த வண்ணாரப்பேட்டை பகுதி—வட சென்னை வட்டாரம் புறக்கணிக்கப்பட்ட பகுதியாக இருக்கிறது. இதன் முன்னேற்றத்திற்கு அவர்கள் என்றும்போல் இனியும் பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்" என்று அவர் குறிப்பிட்டார்,

வாழ்த்து

அடுத்து, தியாகராயர் கல்லூரித் துணைத் தலைவரான பேராசிரியர் ஸ்ரீராமுலு அவர்கள் பாராட்டுரை வழங்கினார்.

அவர் கூறினார் :—

"இன்று நாட்டில் ஜனநாயகப் பாதுகாப்பிற்காக எதிர்க் கட்சியின் தேவை வெகுவாக உணரப்பட்டு வருகிறது. பலம் வாய்ந்தது மட்டுமல்ல—பலனுள்ள எதிர்க் கட்சியினராகவும் விளங்க அண்ணாவும், மற்றும் அவரோடு சேர்ந்தவர்களும் மிகப் பொருத்தமானவர்கள். இன்று அவர்கள் 15 பேர்கள்தான் இருக்கின்றனர்; என்றாலும் இந்த நிலை, எதிர்காலத்திற்கு நம்பிக்கை மிகுந்ததோர் அறிகுறியாகும். இப்போதைய நிலையில் இந்த 15 பேர்களும், பயன் தரத்தக்க எதிர்க் கட்சியினராகப் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் ஆட்சிப் பொறுப்பையே ஏற்கவல்ல இவர்களை, இன்று நாம் வரவேற்கிறோம்—பாராட்டி மகிழ்கிறோம்; 'உங்கள் பணி வெல்க' என வாழ்த்துகிறோம்.

"சட்டசபையில், நீங்கள், இந்த நாட்டின் கல்வி நிலை பற்றியும், கல்வி வளர்ச்சி குறித்தும் உருவான பணிகளைச் செய்ய வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறேன்."

பேராசிரியர் ஸ்ரீராமுலு அவர்கள், பின்னர், கல்லூரி முதல்வரான சண்முகம் அவர்கள் அனுப்பித் தந்திருந்த வாழ்த்துச் செய்தியைப் படித்து, தனது பாராட்டுரையை முடித்துக் கொண்டார்.

அடுத்து, தோழர்கள் இராமநாதன், வே. கபிலன் ஆகியோரும் சிறிதுநேரம் பேசினர்.

மு. கருணாநிதி

பின்னர், தோழர் மு. கருணாநிதி அவர்கள், பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசினார்.

அண்ணா

இறுதியாக அண்ணா அவர்கள் நன்றி பகன்றார்கள்.

தமது உரையில் அண்ணா அவர்கள் எதிர்க்கட்சி பற்றி அழகியதோர் எடுத்துக்காட்டுடன் விளக்கமளித்தார்கள்.

பின்னர், புரட்சி நடிகர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களும், குழுவினரும் 'இன்பக் கனவு' என்ற தமிழ் சமூக நாடகத்தைத் திறம்பட நடித்தனர். புரட்சி நடிகரின் ஒப்பற்ற நடிப்பும், தோழர்கள் எம். ஜி. சக்கரபாணி, முத்தக்கூத்தன், என். எஸ். நாராயணபிள்ளை, தோழியர் ஜி. சகுந்தலா ஆகியோருடையவும், மற்றும் பலருடையவும் சிறப்பான நடிப்பு, கூடியிருந்தோர் பல்லோரின் பாராட்டுதலையும் ஒருங்கே பெற்றன.

நாடக இறுதியில், தோழர் அறிவழகன் அவர்கள், புரட்சி நடிகர்தம் குழுவினருக்கு நன்றி தெரிவித்துவிட்டு, மன்றத்தின் நோக்கத்தையும், அதன் பணிகளையும, புரட்சி நடிகருக்காக மற்றுமோர் முறை விளக்கிக் கூறினார்.

புரட்சி நடிகரின் சிறந்த நடிப்புத் துறையையும், நல்ல பண்புகளையும் அத்துடன் பாராட்டினார்.

புரட்சி நடிகரை, வரும் ஜூலை திங்களில், மன்றம் நடத்தும் கலை விழாவில் பங்குகொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

எம். ஜி. ஆர். நன்றி

நன்றி தெரிவித்துப் பேசிய பேசிய எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள், கவின் கலை மன்ற வளர்ச்சிக்கு தம்மாலானதைச் செய்யத் தாம் தயங்கவில்லை என்று குறிப்பிட்டார்.

அத்துடன் நிகழ்ச்சி இரவு சுமார் 11-30 மணிக்கு இனிதே முடிவுற்றது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், வீட்டுக்கு வீடு பரிசோதனை நடத்தி குஷ்டரோகத்தை ஒழிக்க சென்னை மாநிலத்தில் ஆறு நிலையங்கள் இயங்கி வருகின்றனவாம்.

சேலம் மாவட்டத்தில் எத்தாப்பூரிலும், காந்திகிராம செம்மதியிலும், திருவண்ணாமலை, பரமக்குடி, விருத்தாச்சலம் ஆகிய இடங்களிலும் இந்த நிலையங்கள் உள்ளனவாம்.

சென்னை 42-வது வட்ட இளைஞர் முன்னேற்றக் கழகம் அமைப்பு

30—3—57 இரவு 9-மணிக்கு, திருவல்லிக்கேணி-கரீம் சுபேதார் தெரு, 25-ம் எண்ணுள்ள இல்லத்தில் மேற்படி கழக நிருவாகிகள் தேர்தல் தோழர் நீலநாராயணன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் எம். எம். ஷாகுல் அமீது செயலாளராகவும், மீரான் மொய்தீன் துணைச் செயலாளராகவும், கே. எ. காஜா மொய்தீன் பொருளாளராகவும், மற்றும் 24 பேர் செயற்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, விரைவில் கழகத் திறப்புவிழா நடத்துவதென்று முடிவுசெய்யப்பட்டதுடன், தோழர் காஜா மொய்தீன் மறைவுக்கு அனுதாபமும் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

வடசென்னை தாளமுத்து-நடராசன் முன்னேற்ற மன்றம்

9—4—57 இரவு 7-30 மணியளவில் மேற்படி மன்றக் கூட்டம் தோழர் எம். கே. சாமி இல்லத்தில், தோழர் அன்புரோஸ் தலைமையில் நடைபெற்றபோது, மன்ற வரவு - செலவுக் கணக்குகள் சரிபார்க்கப்பட்டபின், தோழர்கள் எம். கே. சாமி செயலாளராகவும், எஸ். ஆனந்தன் துணைச்செயலாளராகவும், ப. முனுசாமி பொருளாளராகவும், 9 பேர் செயற்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை-மயிலை அப்துல் மஜீத் படிப்பகம்

29—3—57-ல் மயிலாப்பூர் பாஷா தோட்டத்தில் தோழர் எ. இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இம்மன்ற அமைப்புக் கூட்டத்தில், தோழர்கள் எம். எ. சக்கூர் செயலாளராகவும், எச். முகமத் மொய்தீன் துணைச்செயலாளராகவும், என். துரை பொருளாளராகவும் மற்றும் 20 செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டபின் திறப்புவிழாபற்றியும் முடிவெடுக்கப்பட்டது.

சென்னை-மயிலை உதயசூரியன் படிப்பகம்

6—4—57-ல் தோழர் அ. சி. நெடுமாறன் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், தோழர்கள் அ. சி. நெடுமாறன் செயலாளராகவும், எஸ். எம். சீனுவாசன் துணைச்செயலாளராகவும், வா. கிருட்டிணன் பொருளாளராகவும், இ. எஸ். மணி துணைப் பொருளாளராகவும், 11 பேர் செயற்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

21-4-57-ல் தோழர் பி. இராமசாமி தலைமையில் தோழர் கோ. இளவரசு கொடியேற்றி வைத்தார். தோழர் பொன். கு. கோதண்டபாணி இப்படிப்பகத்தைத் திறந்துவைத்துப் பேசினார்.

குடியேற்றம் — நல்லூர்பேட்டை 'சூரியன் அறிவக'த் திறப்பு விழா

13—4—57-ல் சூரியன் அறிவகத் திறப்பு விழா, கல்லபாடி முத்துசாமி தலைமையில் நடைபெற்றபோது, புலவர் காஞ்சி-அமிழ்தனார் திறந்துவைத்துச் சொற்பொழிவாற்றினார்; தோழர்கள் செ. மா. அரங்கசாமி, இரா. சாரங்கபாணி, கு. முனுசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சென்னை நண்பர் நூலகம்

13—4—57 காலை 9 மணியளவில் சென்னை—கொண்டியம்பதி கன்னையநாயுடு வீதி, எண் 11-ல் 'நண்பர் நூலகம், என்ற நூலகத்தை திரு புலவர் மயிலை சிவமுத்து அவர்கள் திறந்துவைத்தும், தலைமை தாங்கியும் நடத்தித் தந்தார்; தோழர்கள் சந்திரசேகரன், ஜயசந்திரன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்,

தாயகம் திரும்பிய தோழருக்குப் பாராட்டு

பொறியியல் கல்வி பெற்ற ஏ. விமலனுக்கு விருந்து உபசாரம்

தர்மபுரி, எப். 28—

22—4—57 இரவு 8 மணிக்கு, சேலம்—தர்மபுரி 'ரத்னு நிலைய'த்தில், மேல்நாடு சென்று, பொறியியல் கல்வி பயின்று தேர்ச்சி பெற்றுத் தாயகம் திரும்பிய தோழர் ஏ. விமலன் அவர்கட்கு' ரத்னு அண்டு எஸ்.டி.ஜி.எம்.எஸ். மோட்டார் கம்பெனி தொழிலாளர்கள் சார்பில் ஓர் விருந்தளிப்பு விழா திரு. டி. எம். காளியண்ணன் தலைமையில் நடைபெற்றது. திருவாளர்கள் பி. அப்பாவு, பி. கஸ்தூரி ஆகியவர்களுக்கு தொழிலாளர்கள் மலர் மாலைகள் அணிவித்தனர்; பாராட்டு இதழ் வாசித்துத் தரப்பட்டது.

தோழர்கள் இராசகோபால், லோகநாதன், பி. கஸ்தூரி, நாகராசமணியக்காரர், பி. கந்தசாமிக் கவுண்டர், டி. எ. எம். சுப்பிரமணிய(செட்டியார்) ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

திரு. விமலன் அவர்கள் தமக்கு அளிக்கப்பட்ட சிறப்பான விருந்திற்கும் பாராட்டுரைக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார். இரா. செகநாதன் நன்றி நவின்றார்.

அரியலூர் அண்ணு இளைஞர் மன்றம்

1—4—57-ல் தோழர் அப்துல் ரசாக் மண்டியில், தோழர் ந. பெரியசாமி தலைமையில் நடைபெற்ற இம்மன்ற அமைப்புக் கூட்டத்தில், தோழர்கள் ந. குமாரசாமி செயலாளராகவும், வை. பெரியசாமி துணைச் செயலாளராகவும், இராகு பொருளாளராகவும், தாமோதரன் மன்றப் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர்கள் கோ. சிவபெருமாள், சு. கன்னையன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கோவை மறுமலர்ச்சி மன்றம்

26—3—57 இரவு நடைபெற்ற மேற்படி மன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் தோழர் ம. மாணிக்கம் அவர்களைத் தலைவராகக் கொண்ட நிருவாகக் குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

13-4-57 பகல் 12 மணிக்கு வெற்றிபெற்ற கழகத் தோழர்களைப் பாராட்டுமுகத்தான், கழகப் பணமனையில் ஏழைகளுக்கு கஞ்சி வார்க்கப்பட்டது.

சென்னை - மணவழகர் மன்றம்

7—4—57ல் சென்னை-கொண்டலையர் தெரு, 27-ம் எண்ணுள்ள கட்டடத்தில் மேற்படி மன்றம் நிறுவப்பட்டது. அதில் நக்கீரர் பட்டி மன்றமும், திரு. வி. க. நூல் நிலையமும், பேராசிரியர் கா. நமச்சிவாயர் படிப்பகமும், டாக்டர் சி. நடேசனார் இரவு பாடசாலையும் துவக்குவது என்று திட்டமிட்டு, சிறுவை-நச்சினார்க்கினியன் தலைவராகவும், டி. எம். பாலசுந்தரம் துணைத் தலைவராகவும், எ. கலியாணசுந்தரம் செயலாளராகவும், டி. ஜி. சந்தானம் துணைச் செயலாளராகவும், பி. வி. கௌரிசங்கர் நூல் நிலையக் காப்பாளராகவும், சி. ஜே. சடகோபன் பொருளாளராகவும், மேலும் 5-செயற்குழு உறுப்பினரையும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

வெற்றி விழா ஊர்வலம்

13—4—57 காலை சுமார் 9 மணி யளவில் சூளை கே. வி. கே. சாமி நினைவு படிப்பகத்தின் சார்பில், சத்தியவாணிமுத்து அவர்களைப் பாராட்டி வெற்றி விழா ஊர்வலம் கலியாணமேஸ்திரி தோட்டத்தில் நடைபெற்றது. பொதுமக்களும், கழகத் தோழர்களும், அனுதாபிகளும் வாத்திய இசையுடன் மலர் மாலையும், கைத்தறி ஆடையும் கொண்டு வரவேற்றனர். பிறகு தோழியர் சத்தியவாணிமுத்து எல்லோருக்கும் நன்றிகூற ஊர்வலம் முடிவுற்றது.

ரூ. 10,000 செலவில்!

திண்டுக்கல்லில் மகப்பேறு விடுதி

19—4—57ல், சென்னையின் புகழ்வாய்ந்த வணிகரும்—திண்டுக்கல் சிறந்த நன்கொடையாளருமான திரு. க. சுந்தரம் பிள்ளையவர்களால், திண்டுக்கல்—கமலா நேரு மருத்துவ விடுதியின் துணையாகமாக ரூ. 10,000 செலவில் கட்டப்பட்ட 'தாயம்மாள் மகப்பேறு விடுதி'யை தமிழவேள் பி. டி. இராசன் அவர்கள் திறந்துவைத்தார்.

திரு. இராசன் அவர்கள், இப்பயனுள்ள நன்கொடையளித்த திரு. க. சுந்தரம் பிள்ளையவர்களை வெகுவாகப் பாராட்டி, மற்றையோரும் இவ்வாறு பயனுள்ள கொடை அளிக்க முன்வர வேண்டுமென்றார்.

திரு. க. சுந்தரம் பிள்ளையவர்கள் மறைந்த தனது துணைவியார் தாயம்மாள் வேண்டுகோளின் வண்ணம் இம்மகப்பேறுவிடுதியை கட்டித்தந்ததற்கு எல்லோரின் பாராட்டுதலையும் பெற்றார். (ஒ-நி.)

சென்னை-இராயபுரம் முத்தமிழ் கலை மன்றம்

1957—58-ம் ஆண்டுக்கு தோழர்கள் இரா. லோகநாதன் தலைவராகவும், எ. சி. எஸ். மணி துணைத் தலைவராகவும், எஸ். மாரிமுத்து செயலாளராகவும், ஆர். கோவிந்தசாமி துணைச் செயலாளராகவும், கே. பொன்னுசாமி பொருளாளராகவும், பி. நீலகண்டன் கணக்குத் தணிக்கையாளராகவும், மற்றும் பதின்மர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சேவூர் (ஆரணி) அழகிரி மன்றம்

10—4—57 பகல் 1½ மணிக்கு, மேற்படி மன்றப் பணிமனையில் தோழர் எஸ். எ. கைலாசன் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, மன்ற வரவு - செலவுக் கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது; மன்றப் பொருளாளராகத் தோழர் பி. எம். சோமசுந்தரம் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சோழவந்தான் கே. வி. கே. சாமி நினைவு படிப்பகம்

7-4-57 இரவு 7 மணிக்கு, செல்லம் சைக்கிள் கம்பெனியில், தோழர் கு. குருசாமி தலைமையில் நடைபெற்ற இப்படிப்பக உறுப்பினர் கூட்டத்தில், தோழர்கள் கண்ணன் செயலாளராகவும், நீலகண்டன் துணைச் செயலாளராகவும், பழனிச்சாமி பொருளாளராகவும், 8 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஓடைப்பட்டி — பாண்டியனார் படிப்பகம்

5—4—57 இரவு 9 மணிக்கு, தோழர் ப. சுருளிவேல் தலைமையில் நடைபெற்ற இப்படிப்பகக் கூட்டத்தில், தோழர்கள் கி. சின்னையன், எ. எஸ். பி. சிவன், போ. வேலன், டி. சே. எஸ். மணி, ச. கா. சின்னக்காமராசு, எஸ். எஸ். மணி, ச. நடராசன், போ. சு. பெரியகருப்பன் ஆகியோர் பேசியபின், இவ்வாண்டுக்கு பொறுப்பாளராக தோழர் சி. மாயழகனையும், பொருளாளராகத் தோழர் கி. சின்னையனையும், செயலாளர்களாக தோழர்கள் கா. ஆவலுமுத்து, சி. வெள்ளைச்சாமி ஆகியோரையும், 8 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தூத்துக்குடி மஜீத் மன்றம்

7—4—57-ல் இம்மன்ற உறுப்பினர்கள் கூட்டம் மன்றக் கட்டிடத்தில் தோழர் பொன்னுசாமி தலைமையில் நடைபெற்றபோது, செயலாளராக எ.வி.எம். கவுஸ்; துணைச் செயலாளராக டி. எஸ். மாரியப்பன்; பொருளாளராகத் திருமலை ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மத்தியப் பிரதேச மாநிலத்தில் மாபெரும் திட்டம் உருவாகிறது

11,000 பேருக்குத் தொழில் நுணுக்க பயிற்சி தருவதற்கு முயற்சி

உருக்கு, கனரகத் தொழில்களுக்குப் பயிற்சி நிலையம் ஆரம்பம்

போபால், எப். 28—

மத்தியப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுவரும் பிலாய் உருக்குத் தொழிற்சாலைக்கும், கனரக மின்சாரக் கருவித் தொழிற்சாலைக்கும் 11,000 பயிற்சி பெற்றத் தொழில் நிபுணர்களும், கைநுட்ப நிபுணர்களும் தேவைப்படுவராம்!

பிலாய் உருக்குத் தொழிற்சாலை ரூ. 110 கோடி செலவில் உருவாகிறது.

கனரக மின்சாரக் கருவித் தொழிற்சாலை ரூ. 30 கோடியில் நிர்மாணிக்கப்படுகிறது.

இந்த 11,000 பேர்களில் 8,000 பேர் உருக்குத் தொழிற்சாலைக்கும், 3,000 பேர் மின்சார கருவித் தொழிற்சாலைக்கும் நியமிக்கப்படுவார்கள்.

மத்தியப் பிரதேச சர்க்கார் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆண்டுதோறும் 21,000 பேருக்குப் பயிற்சி அளிக்க 1,58,60,000 ஒதுக்கியுள்ளனர். தற்சமயம் 300 பேருக்குப் பயிற்சி அளிக்க வசதி செய்துள்ளது.

நடப்பு ஆண்டில் மாநில சர்க்கார் 1,200 பேருக்குப் பயிற்சி அளிக்க முடிவு செய்துள்ளது இந்தத் திட்டத்தின்கீழ் ரெய்பூர், ஜபல்பூர், ரீவா, காண்டலா ஆகிய இடங்களில் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்படும்.

இதைத் தவிர குவாலியரிலும், பயிற்சியாளர்களை தயார் செய்ய ஒரு நிலையம் ஆரம்பிக்கப்படும்.

இந்தத் திட்டங்களுக்கு முதல் ஆண்டில் ரூ. 64 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்படுகிறது.

திருவள்ளூர்—தர்கா மஜீத் நினைவு மன்றம்

7—4—57-ல், 'நெல்லிக்குப்பம் மஜீத் நினைவு மன்ற'த் துவக்க விழா தோழர் டி. எத்திராசன் தலைமையில் நடைபெற்றபோது, தலைவராக தோழர் அப்துல்கனியும், துணைத் தலைவராக தோழர் சமியுல்லாவும், பொருளாளராக தோழர் எம். எ. சுப்பானும், செயலாளராக தோழர் டி. எத்திராசனும், துணைச் செயலாளராக லதீபும், 5 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பொன்மலை-தமிழ் மன்றம்

5—4—57 மாலை 6½ மணி யளவில் நடைபெற்ற இம்மன்ற செயற்குழுக்கூட்டத்தில், வெற்றி பெற்ற கழகத் தோழர்களுக்கு வாழ்த்தும் பாராட்டும், திரு. குமாரசாமி ராசா மறைவுக்கு அனுதாபமும் தெரிவித்துக் கொள்ளப்பட்டன.

மதுரை அ.இ. தந்தித் தொழிலாளர் 4-ம் பிரிவுத் தொழிற்சங்கம்

7—4—57 காலை 10 மணிக்கு தோழர் ஆர். அரங்கசாமி தலைமையில் நடைபெற்ற இச்சங்க உறுப்பினர் பேரவைக் கூட்டத்தில், 1957—58-ம் ஆண்டுக்கு தோழர் ஆர். அரங்கசாமி அவர்களைத் தலைவராகக் கொண்ட நிருவாகக் குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

குடந்தையில் கழகத் தோழரின் மருந்துவ நிலையம் திறப்பு விழா

7—4—57ல், கழகத் தோழர் டாக்டர் தி. மார்க்கண்டன் அவர்களின் மருத்துவ நிலையத் திறப்பு விழா, குடந்தை உதவி நீதிபதி திரு. எம். இராமையாபிள்ளை தலைமையில் நடைபெற்றது. திரு. வி. ஆர். மூர்த்தி நிலையத்தைத் திறந்துவைத்தார். திருவாளர்கள் ஷேக்முகைதீன், எ. அண்ணாமலை, டி. என். பாஸ்கரன், நாகசுப்பிரமணியம், பி. சட்டநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

கோவை-மேட்டுப்பாளையம் அண்ணு படிப்பகம்

13—4—57 மாலை 5 மணிக்கு பாக்குக்காரத் தெருவில், நகர தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற அண்ணு படிப்பக துவக்க விழாவில் தோழர் நடராசன் தி. மு. க. கொடியினை ஏற்றி வைத்து, படிப்பகத்தையும் திறந்துவைத்துச் சொற்பொழிவாற்றினார்.

அன்று மாலை காந்தி மைதானத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்கு தோழர் புரட்சி சண்முகம் தலைமை வகித்தார். தோழர்கள் சிற்றுளி-சுப்பிரமணியம், சண்முகநாதன், மு. இராமநாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பண்டித நேருவின் தேர்தல் செல்லாது?

போட்டியிட்டவர் மனு

அலகாபாத், எப். 28—

நடைபெற்ற பொதுத் தேர்தலில் மக்கள் சபைக்கு அலகாபாத் மாவட்ட புல்பூர் தொகுதியில் பண்டித நேரு போட்டியிட்டு வெற்றி பெற்றிருக்கிறாரல்லவா?

அவருக்கு அடுத்து அதிக வாக்குகள் பெற்றுள்ள சீதாராம் கெம்கா என்பவர், பண்டிதர் தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாதென்று அறிவிக்குமாறு தேர்தல் குழுவிடம் ஆட்சேபணை மனு தாக்கல் செய்துள்ளார்.

பண்டித நேரு, இந்தியாவின் பிரதமர் என்ற பதவியிலிருந்து கொண்டே தேர்தலில் போட்டியிட்டதால், எல்லாச் சலுகைகளும் உரிமைகளும் அவருக்கு அளிக்கப்பட்டதாகவும், ஆகவே தேர்தல் பாதிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தான் தேர்தலில் போட்டியிடாதவாறு போலீசாரும் துப்பறியும் இலாகாவினரும் பண்டித நேருவின் சார்பில் தன்னை தடை செய்ததாகவும், அரசாங்கத்திற்குச் சொந்தமான பல வாகனங்களை தேர்தல் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தியதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

உத்திரப் பிரதேச உணவு உற்பத்திப் பெருக்கத் திட்டம்

டில்லிப் பேரரசின் தாராள உதவி

புதுடில்லி, எப். 28—

1957—58-ல் உத்தரப் பிரதேசத்தில் ரூ. 2,79,83,000 செலவில் மேற்கொள்ளப் போகும் உணவு உற்பத்திப் பெருக்கத் திட்டங்களுக்காக மத்திய சர்க்கார் கடனாக ரூ. 1,47,38,000; உதவித் தொகையாக ரூ. 78,52,600 தருவார்களாம். மாநில சர்க்கார் உதவித் தொகைப் பங்கு ரூ. 76,62,600.

விதை, இரசாயன விநியோகம் ஆகியவைகளுக்காக ரூ. 9,79,50,000 குறுகிய காலக் கடனாக வேறு தரப்படுமாம்.

இலங்கைத் தேயிலைத் தோட்டத்தில் துப்பாக்கிப் பிரயோகம்

21 பேர் படுகாயமுற்றனர்

தொழிற்சங்கப் போட்டியின் கோரத் திருவிளையாடல்

கொழும்பு, ஏப். 29—

தொழிற் சங்கப் போட்டி—தொழிலாளருக்குத் தரும் கேடுகளுக்கு, இலங்கையிலிருந்து மற்றுமோர் நல்ல உதாரணம் கிடைத்திருக்கிறது.

மத்திய இலங்கையில் உள்ள தேயிலைத் தோட்டம் ஒன்றில், இரண்டு தொழிலாளர்கள்—போட்டித் தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்கள் கைகலந்துகொண்டனராம்.

விளைவு, நிலை கலகமாக உருப்பெற்று, போலீசாரின் தலையீட்டில் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறது.

போலீசார் தங்கள் பங்கிற்கு கலகத்தை அடக்குவதற்கென்று கூறி, துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கின்றனர். இதனால் 21 தொழிலாளர்கள் படுகாயப்பட்டிருக்கின்றனர்.

வேறு ஒரு தகவல்

மற்றுமோர் தகவல், துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர்கள் போலீசார் அல்ல என்றும், தோட்டக் காவலாளியே துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் கூறுகிறது.

போட்டி

தொண்டமான் தலைமையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்ற ஒரு சங்கமும், ஏ. அஜீஸ் தலைமையில் ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் என்ற ஒரு சங்கமும் அமைக்கப்பட்டுள்ளன என்றும், இவற்றைச் சேர்ந்தவர்களே கைகலந்துகொண்டனர் என்றும் கூறப்படுகிறது.

இலங்கை ஜனநாயகக் காங்கிரஸ் அமைப்பு இதுபோல இரண்டாகப் பிளவுபட்டு, கடந்த ஆண்டிலிருந்து, இதுபோன்ற கைகலப்புச் சம்பவங்கள் இடையறாது நடைபெற்று வருவதாகக் கூறப்படுகிறது.

அண்ணு கருத்துரை [1-ம் பக்கத் தொடர்ச்சி]

உயிரோட்டத்தை உணராதவர்கள் எதிர்காலத்தை அறியாதவர்கள்

எதிர் வீட்டிலிருந்துகொண்டு ஏளனம் பேசுபவர்கள் எவருக்கும் புரியாதவர்கள்

"இதிலே இருக்கின்ற உயிரோட்டத்தை உணர மறுக்கின்றவர்கள்—ஒரு சமயம் ஏனோதானோ என்று பேசக்கூடியவர்களாக அரசியலிலே தங்களைத் தாங்களே கருதிக்கொண்டிருக்கலாம்— அரசியலின் எதிர்காலத்தை அவர்கள் நிர்ணயிக்கவில்லை என்றுதான் அதன் பொருள்!

"தி. மு. கழகம் 15 இடங்களில் வெற்றி பெற்றிருக்கிறதென்பதை மூன்று வகையானவர்கள் மூன்று வகையாகப் பேசிக்கொண்டிருக்கின்றார்கள்.

"ஒருவகையானவர்கள்—'இவ்வளவு கஷ்டத்திற்குப் பிறகும் இவ்வளவு நல்ல கொள்கையை வைத்துக்கொண்டிருப்பவர்கள்—இவ்வளவு அழகிய விஷயங்களை விளக்கக் கற்றவர்கள்—பொதுமக்களுக்காக இவ்வளவு அரும்பாடுபட்டவர்கள் — கஷ்டநஷ்டங்களை ஏற்றுக்கொண்டவர்கள்—வீட்டுக்கும் சிறைச்சாலைக்கும் வேறுபாடு அறியாதவர்கள்—தடியடியைத் தாங்கிக்கொண்டவர்கள்—துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டு அஞ்சாதவர்கள்—கை போனவர்கள், கால்போனவர்கள், கண்போனவர்கள் என்ற பட்டியலை கரத்திலே வைத்துக்கொண்டிருப்பவர்கள் —இப்படிப்பட்ட கழகத்தார் 15 இடங்கள் தானா பிடித்தார்கள்?' என்று கவலையோடும் அனுதாபத்தோடும் அக்கரையோடும் கேட்கிறார்கள்.

"இன்னும் சில பேர்—தாங்கள் அதிகமான அளவுக்குப் பிடித்துவிட்டோம் என்ற மகிழ்ச்சியும், அந்த மகிழ்ச்சி மமதையளவுக்கு வளர்ந்துவிட்ட காரணத்தால், '15 இடங்கள் தானே? நாங்கள் 150,' என்று அவர்கள் சொல்லுகின்றார்கள்.

"இந்த இருதரப்பினரையும் எனக்குப் புரிகின்றது.

"மற்ருெரு கூட்டத்தார், '15 இடங்கள் தானே?' என்று, மீசையை முறுக்கிக்கொண்டு, யாருடைய வீட்டு எதிரிலோ இருந்துகொண்டு பேசுகிறார்கள். மற்ற இருவரையும் எனக்கு நன்றாகப் புரிகிறது; ஆனால் மூன்றாவதாகச் சொன்ன இவர்களைப் பற்றி எனக்குப் புரியவும் இல்லை; புரிந்தால் தயவு செய்து நீங்களே எடுத்துச் சொல்லுங்கள்.

"இப்படி மூன்று வகையானவர்கள், '15 இடங்கள் தானே?' என்று பேசிக்கொண்டிருந்தாலும் கூட, எல்லாக் குரல்களும் தி. மு. கழகத்தின் வெற்றியைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கின்றன.

"கடற்கரை ஓரத்திலே காமராசர், 'தி. மு. கழகத்திற்குக் கொள்கை என்ன? திட்டம் என்ன?'—என்று கேட்டாராம்! நாட்டை மீட்பதைவிட வேறு நல்ல கொள்கை என்ன? அதைவிடச் சிறந்தத் திட்டம் வேறு என்ன இருக்கமுடியும்?

"18 வயதுள்ள ஒரு வாலிபன் தன்னுடைய நண்பனிடத்தில் பேசுகின்ற நேரத்தில், 'நான் இப்போதுதான் வேலைக்குப் போயிருக்கிறேன்; அடுத்த வருடம் மனதிற்குப் பிடித்த ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொண்டு நிம்மதியாகக் குடும்பம் நடத்தப்போகிறேன்; இது என்னுடைய திட்டம்; அடுத்த வருட திட்டம்......' என்று சொன்னவுடன், குறும்புக்காரனுயிருந்தாலொழிய அந்த நண்பன், 'நீ திருமணம் செய்துகொண்ட பிறகு உன்னுடைய கொள்கை என்ன? —திட்டம் என்னவென்று சொல் பார்க்கலாம்' என்று கூறுவானே தவிர, 'என்னென்ன செய்யப் போகிறாய்?' என்று கேட்பான்?

"திருமணத்திற்குப் பிறகு செய்யவேண்டிய காரியத்தையும், ஒரு கட்சி எதிர்க் கட்சியாக இருந்து செய்யவேண்டிய காரியத்தையும் அரசியல் அநாகரிகம் படைத்தவர்கள்தான் கேட்கலாமே தவிர, நாகரிக உள்ளம் படைத்தவர்கள் கேட்கமாட்டார்கள்.

"ஆளும் கட்சி சரியான முறையிலே நடக்காவிட்டால், அவர்கள் செய்கிற அவலக் காரியங்களை வெளியே சொல்லி, நாட்டு மக்களிடம் நியாயம் கேட்போம். இதை எடுத்துக் கேட்பானேன்? சுலபத்திலே புரிய வேண்டிய காரியமாயிற்றே, இது!

"என்ன செய்வீர்கள்—என்று கேட்கிறார்கள்; அந்த நாளில் சத்தியமூர்த்தி என்ன செய்தார்? ஜஸ்டிஸ் கட்சி மெஜாரிட்டியாகவும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் 'அவை'யிலேயும் உட்கார்ந்திருந்த காலத்தில், சென்னை சட்டசபையில் சத்தியமூர்த்தி அமர்ந்திருந்தாரே, என்ன செய்தார்? அதைத்தான் நாங்களும் செய்வோம்;

"ஆனால், சத்தியமூர்த்தி எதைச் செய்வதற்கும், ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் அனுமதி கொடுத்தார்களே, அந்த அரசியல் நாணயம் காங்கிரஸ்காரர்களிடத்தில் இருக்கிறதா? அதைத்தான் பார்க்கப் போகிறோம்!

"அந்த அரசியல் நாகரிகம் இருந்தால், அவர்கள் கொண்டு வருகின்ற சட்ட திட்டங்களில் எங்காவது ஓட்டை உடைசல் இருந்தால் அதை எடுத்துக் காட்டுவோம்."

'தி ரியல் எஸ்டேட்'

(தமிழ்—மாதம் இருமுறை)

ஆசிரியர் : உடுமலை B. R. நாயுடு ('உடுமலை பிரங்கி')

★

தனிப் பிரதி விலை 0—1—6

7-வது இதழ் 3—5—57-ல் வெளிவரும்

தி. மு. கழகங்கள், துணைக் கழகங்கள், இலவசப் பிரதிகளுக்கு எழுதலாம்.

முகவரி :—எண் 33, திருவேங்கடமுதலி தெரு
பெரியமெட்டு, சென்னை-3. போன் எண் : 2597

தஞ்சை மாவட்ட தி. மு. கழக செயற் குழுக் கூட்டம்

"5—5—57 ஞாயிறு மாலை 3 மணியளவில், மாயூரம்—கூறைநாடு வேலாயுதம் மன்றத்தில், தஞ்சை மாவட்ட தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். அது போது, பொதுத் தேர்தல் விளைவுகள், உள் ஆட்சி மன்ற தேர்தல், பிற இதர பிரச்சினைகள் ஆராயப்படும். உறுப்பினர்கள் அனைவரும் தவறுது வருகை தந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்,"

என்று, தஞ்சை மாவட்டச் செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ அறிவிக்கிறார்.

'மே தின விழா'வும்-

தி. மு. க. எம்.எல்.ஏ.-க்களுக்குப்

பாராட்டு விழாவும்

1—5—57 புதன் மாலை 6 மணிக்கு, சென்னை—நேப்பியர் பூங்காவில், சிம்சன் அண்டு குரூப் கம்பேனி தி. மு. கழக தொழிலாளர்கள் சார்பில், தோழர் வி. எஸ். கோவிந்தராசன் தலைமையில் மேற்படி விழாக் கூட்டம் நடைபெறும்.

பொதுச்செயலாளர் இரா.நெடுஞ்செழியன், அண்ணு, மற்றும் பலர் கலந்துகொள்வார்கள்.

புதுடில்லி, எப். 29—

வெள்ளத் தடுப்பு சம்பந்தமாக இந்திய அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைளைப் பற்றி ஆராய்ந்து வழிகளைக் கூற, மேனாட்டு நிபுணர்கள் இருவர் உட்பட ஐவர் கொண்ட குழு ஒன்றை இந்திய அரசாங்கம் நியமித்துள்ளது.

மே தினவிழா

★

பெங்களூர் - 2

1—5—57ல், பெங்களூர் - 2. ஆர். கே. பதிரி தேநீர் விடுதி'யின் சார்பில் மே தின விழாக் கொண்டாடப்படும்; அது போது, தோழர்கள் வி. முத்து, ந. மணி என் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

மதுரை :

1—5—57 காலை 11 மணிக்கு, மதுரை - மீன் மார்க்கெட், அறிவு படிப்பகத்தின் முன்பு கொடியேற்றுவித்தும், படிப்பக பகுதிகளில் தோரணங்கள் கட்டியும், சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கியும் மே தின விழாக் கொண்டாடப்படும்.

பொன்மலை - மேலக் கற்கண்டார் கோட்டை :

1—5—57 காலை 10 மணிக்கு, தி. மு. கழகக் கிளையின் சார்பில், கழக இல்லத்தில் சிறுவர்களுக்கு இனிப்புகள் வழங்கி 'மே விழா' கொண்டாடப்படும்.

திருப்பூர் :

1—5—57 காலை 7-30 மணி முதல் இரவு 9 மணி வரை, திருப்பூர் - அவிநாசி ரோடு கே. வி. கே. சாமி திடலில், விழா நடைபெறும்; தோழர் தயாளன் குழுவினர் இன்னிசையும், தோழர் கபூர் குழுவினர் சிலம்ப விளையாட்டும், சிறுவர்களுக்கு இனிப்பும், பொதுமக்களுக்கு குளிர் பானங்களும், மற்றும் பல விசேட நிகழ்ச்சியோடு தோழர் தி. ச. தமிழரசு தலைமையில், தோழர்கள் மு. முத்துரத்தினம், இராசு. ஆகியோரின் சொற்பொழிவும் நடைபெறும்.

சென்னை :

1—5—57-ல், சென்னை ஓட்டல் தொழிலாளர் சங்க 13-வது மாநாடும், மே தினமும், கோகலே மண்டபத்தில் நடைபெறும். இரு நிகழ்ச்சிகளிலும் தோழர்கள் பலர் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுவர்; கலா நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

திரைப்படத் தயாரிப்பு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தம் 3,244 படங்களைத் தணிக்கை செய்தது. அவற்றில் 3,101 - படங்களுக்கு 'யு' நற்சான்று (சகலரும் பார்க்கத் தகுந்தவை) பத்திரமும், 96 படங்கள் 'ஏ' நற்சான்று (வயது வந்தவர்கள் மட்டிலும் பார்க்கத் தகுந்தவை) பத்திரமும் அளிக்கப்பட்டன.

இவற்றில் 2,330 படங்கள் வெளிநாட்டுப் படஙகள், 867 - படங்கள் (துண்டுப் படங்கள் உட்பட) இந்தியப் படங்கள்.

மொத்தம் 47 படங்களுக்கு நற்சான்று வழங்க மறுக்கப்பட்டது; அவற்றில் 46 படங்கள் வெளிநாட்டுப் படங்கள்.

தணிக்கை செய்யப்பட்டு அத்தாட்சி அளிக்கப்பட்ட படங்களில் மொத்தம் 73,923 அடி நீளத்துக்குப் படப் பகுதிகள் வெட்டப்பட்டன.

இந்த ஆண்டிலும் பம்பாய்தான் படத் தயாரிப்பில் முக்கிய கேந்திரமாக இருந்தது; அதற்கு அடுத்தபடியாக சென்னையிலும், கல்கத்தாவிலும் அதிகமான படங்கள் தயாரிக்கப்பட்டன.

இவ்வாண்டில் திரைப்படப் பிரிவு, அதன் படத் தயாரிப்பு பிரிவுகளின் மூலமாக, 35 வரலாற்றுப் படங்களைத் தயாரித்தது.

கி. மனேகரன்

நிகழ்ச்சிகள்

★

மே 1 : பெங்களூர்
3 : கோவை
4 : மேட்டுப்பாளையம்
5 : திருச்சி
6 : முசிறி
7 : புதுக்கோட்டை
11 : துறையூர்

★★★★★★★★★★★★★★★★★

மேதின விழாவன்று! திராவிடன் அளிக்கும் கருத்து விருந்து!

சிறந்த அரசியல் கட்டுரைகள்! கதை—கவிதைகள்! இருவண்ண முகப்பு ஆகிய அம்சங்களுடன்

திராவிடன்

மேதினசிறப்பிதழ்

★

1—5—57 அன்று சென்னை நகரிலும், 2—5—57 அன்று எல்லா ஊர்களிலும் வெளிவரும்

விலை 4 அணு

தோழர்களே! விருந்தினைச் சுவைக்க உள்ளூர் விற்பனையாளரிடம் இன்றே பதிவுசெய்து கொள்ள வேண்டுகிறோம்.

நிர்வாகி : திராவிடன், சென்னை-1

★★★★★★★★★★★★★★★★★

கழகக் கூட்டங்கள்

★

உறையூர் :

டாக்கர் ரோடில்

2—5—57 மாலை 6-மணிக்கு

தலைவர் : எஸ். நெடுமாறன்

பேசுவோர் :

சி. பி. சிற்றரசு
எம். எஸ். மணி
தி. மா. பரமசிவம்
ஆர். நாகசுந்தரம்

★

ஏகாபுரம் :

வளையச்செட்டிப்பட்டி மாரியம்மன்கோவில் திடலில்

2—5—57 மாலை 5-மணிக்கு

தி. மு. கழகத் துவக்கவிழா

தலைவர் : வி. டி. சிங்காரம்

பேசுவோர் :

என். வி. நடராசன்
ப. இராமலிங்கம்
இரா. தாண்டவன்
சிற்றுளி-சுப்பிரமணியம்
ப. கண்ணன்
ஏ. கே. கே. இராசமாணிக்கம்

★

காடையாம்பேட்டை :

2—5—57 மாலை 7-மணிக்கு

தலைவர் :

ஏ. கே. கே. இராசமாணிக்கம்

பேசுவோர் :

என். வி. நடராசன்
ப. கண்ணன்
கா. கந்தசாமி
இரா. தாண்டவன்
ப. இராமலிங்கம்

★

சின்னசீரகப்பாடி :

(சேலம் மாவட்டம்)

2—5—57 காலை 7-30 மணிக்கு

தி. மு. கழகத் துவக்கவிழா

கொடியேற்றுபவர் : ஏ. கே. கே. இராசமாணிக்கம்

துவக்குபவர் : ப. இராமலிங்கம்

பேசுவோர் :

என். வி. நடராசன்
ப. கண்ணன்
இரா. தாண்டவன்

மாயூரம் நகர தி. மு. க. செயற்குழு உறுப்பினர்களுக்கு

2—5—57 இரவு 8 மணிக்கு, பெரியகடைவீதி, எஸ். என். குருமூர்த்தி அவர்கள் கடை மாடியில் மேற்படி கிளையின் செயற் குழுக் கூட்டம் நடைபெறும்; உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டப்படுகிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.